புதிய அவையம்

**PUTHIYA AVAIYAM**
(PEER – REVIEWED JOURNAL)
**ISSN :2456-821X**
**Vol. 08, Issue 02, January 2025**

==================================================

# தமிழர் வாழ்வியலும் கூட்டு நனவிலியும்

==================================================

**முனைவர் இரா. இராஜா**
உதவிப்பேராசிரியர்
தமிழ் இளங்கலை மற்றும் முதுகலைத்துறை
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)
திருப்பத்தூர் – 635601.

==================================================

**முன்னுரை**

தொல்பழங்காலம், சங்ககாலம், களப்பிரர் காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஆங்கிலேயர் காலம், இந்திய ஒன்றியம் என்று தமிழர் வாழ்வியல் நீண்டு வருகிறது. தமிழர் வாழ்வியலை தமிழ் இலக்கியங்கள் காட்சிச் சித்திரங்களாக உருவாக்கித் தந்திருக்கின்றன. அந்த அடிப்படையில் சங்க இலக்கியம், காப்பியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், உரைநடை இலக்கியம், நவீன இலக்கியம் என அமைந்துள்ள தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழர் வாழ்வியலை அடையாளம் கண்டு ஆய்வாளர்கள் வாசித்து வந்திருக்கிறார்கள்; மறுவாசிப்புகளும் நடந்துகொண்டிருக்கின்றன. வாழ்வியல் என்பது தரவுகளால் இயங்குவதல்ல. அது பழக்க வழக்கங்களால் மாறி மாறி வந்துகொண்டிருப்பது. அந்த மாற்றங்களை இலக்கியங்கள்

நன்றாகப் பதிவு செய்துள்ளன. அதனால்தான் வாழ்வியலை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்கிற இக்கட்டுரையில் இலக்கியங்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றன.

மேலும் இலக்கியங்கள் சமூகம், உளவியல், மொழியியல், நாட்டாரியல், தத்துவம், வரலாறு, அழகியல் எனப் பல துறைகளை உள்ளடக்கி இயங்கி வருகின்றன. அதுமட்டுமல்லாமல் தரவுகளை அனுபவங்களாக மாற்றுவதும் பழைய அனுபவங்களை வெளியேற்றுவதும் புதிய அனுபவங்களை உருவாக்குவதுமாக இலக்கியங்கள் மனதை இயக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த இயங்குதலில் சமணம், பௌத்தம், ஆரியம், ஐரோப்பியம், ஆங்கிலம் எனப் பல ஆதிக்கங்களுக்கு இடையிலும் இன்றும் தமிழ் தன்னுடைய வாழ்வியலில் தனித்துவமாக இருக்கிறது. வாழ்வியல் என்றவுடன் அது பண்பாடு என்பதுதான் முதலில் நினைவுக்கு வரும். காரணம் அரசியல் வாழ்வு, பொருளாதார வாழ்வு எனப் பிற வாழ்வுகள் இருந்தாலும் அவை அனைத்தும் பண்பாட்டை நோக்கியே அமைந்திருக்கின்றன. அந்தப் பண்பாடு மொழியாலான இலக்கியத்தில் நன்குக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அத்தகையப் பண்பாட்டு வாழ்வில் தமிழ்த் தனித்துவமாக இருக்கிறது என்றால் அது எப்படி சாத்தியமானது? உடனே ஒரு பதில் கிடைக்கும். அது திராவிட தத்துவத்தின் கண்டுபிடிப்பும் அதன் அரசியல் செயல்பாடும் என்று.

அயோத்திதாசர், பெரியார் காலக்கட்டத்தில் வேண்டுமானால் திராவிடத் தத்துவம் தீவிரமாக இருந்தது என்று வைத்துக்கொள்ளலாம். இன்று அது முதலாளித்துவ நலன் சார்ந்ததாக மாறிவிட்டது. பெரியார் அடையாள அரசியலாக மாறிவிட்டார். இருந்தும் தமிழ் அரசியலும் தனித்துவமாக இருக்கிறதே? திராவிடத் தத்துவம் இலக்கியத்தில் பெரிய விளைச்சலைச் செய்யவில்லை. மேலும் பண்பாட்டில் பெரியாரின் தாக்கம் குறைவு. என்றாலும் தமிழ் தனித்து இயங்குவதும் பிற ஆதிக்கத்திற்கு முழுமையாகத் தன்னை ஒப்படைக்காததும் தன்னைப் புதுப்பித்துக்கொள்வதும் எப்படிச் சாத்தியமாகிறது? என்ற கேள்வியின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.

**நாகரிகத்தின் தோற்றம்**

ஃபிராய்டு தனது ‘குலக்குறியும் விலக்கும்’ (Totem and Taboo) நூலில் ‘குழுத்தலைவன் பெண்கள் உட்பட அனைத்தையும் தனது கட்டுப்பாட்டில்

வைத்திருக்கிறான். தாய்க்காதலை உடைய இளைஞர்கள் ஒன்றுகூடித் தலைவனைக் கொன்றுவிடுகின்றனர். தலைவனைக் கொன்ற குற்றவுணர்விற்குக் கழுவாயாக, தலைவனின் மீதான பகையுணர்ச்சியையும் குழுத்தாயர் மீதான காம உணர்ச்சியையும் மனத்தில் அமுக்கிக்கொண்டு தலைவனைக் கடவுளாகவும் தலைவனுக்குரிய குழுத்தாயர் உட்பட அனைத்துப் பொருள்களையும் வழிபடு பொருள்களாகவும் வழிபடுகின்றனர்' (அரங்க. நலங்கிள்ளி, 2019:165). "மானிடத்தின் இந்த முதல் விலக்கும் (Primal Taboo) முதல் வழிபாடும்தான் (Primal Worship) மனித சமுதாய அமைப்புத் தோற்றத்திற்கும் மனித சமயத் தோற்றத்திற்கும் (The Orgin of Religion) அடிப்படையாயின" (மேலது; 165-166) என்பது ஃபிராய்டிய வாதம்.

ஆதிக்குழு வாழ்வில் தோற்றம் கொண்ட இடிப்பஸ் சிக்கல் உணர்ச்சி காலப்போக்கில் நனவிலியாகிக் 'கூட்டு நனவிலி மனம்' (Collective Unconscious Mind) தோற்றம் கொண்டது என்பதோடு இந்தக் கூட்டு நனவிலி, மானிட மனத்தில் மரபணுக்கள் (Genes) மூலமாகக் காலம்தோறும் கடத்தப்பட்டு வருகிறது என்பதாகவும் ஃபிராய்டு கூறுகிறார்" (மேலது; 171). குழு வாழ்வில் இருந்த கூட்டு நனவிலி மனம் நாகரிகம் உண்டான பிறகான இன்றைய வாழ்வில் தனிமனித நனவிலியாக இயங்குகிறது என்று கூட்டு நனவிலி மனத்தை நனவிலியோடு இணைத்துப் பார்க்கிறது ஃபிராய்டியம். ஆனால் யூங் அதை ஏற்காமல் மனித இனத்தின் தொடக்ககால அனுபவங்கள் கூட்டு நனவிலியாகிக் காலம்தோறும் தொடர்கிறது என்றும் அது தனியரின் நனவிலி மனத்தைவிட ஆழமானது; வலிமையானது என்றும் கூறுகிறார். "கூட்டு நனவிலியுள் உலக/மனித இனப் பொதுமைக் கூறுகளான உருக்கள், குறியீடுகள், புனைவுகள் உள்ளன. இவைதான் கூட்டு நனவிலியின் மொழியாகும். இவற்றின் பொதுப்பெயரே மூலப்படிவங்கள் (Archetypes) ஆகும்" (தி.கு.ரவிச்சந்திரன், 2014:238).

"மூலப்படிவங்கள் மனித இன மூதாதையரின் அனுபவம் வழியில் திரும்பத் திரும்ப நடக்கின்ற உள நிகழ்வுகளின் கருத்துருவாக்கங்கள் ஆகும்....இந்த மூலப்படிவங்கள் சமூகம் தோன்றியதற்கு (அல்லது நிறுவனமயமாக்கப்பட்டதற்கு) முன்பே தோன்றியவை" (தி.கு.ரவிச்சந்திரன், 2017:27). "மனித இனத்தின் ஆழ்நிலைப் உளப்பகுதியில் பொதிந்துக் கிடக்கின்ற பொதுக்கூறுகள் மூலப்படிவங்கள் என்றாலும் அவரவர் சார்ந்த சமூக,

பண்பாட்டுக்கு ஏற்ப வடிவம் கொள்கின்றன" (மேலது., 29). "உலகம் முழுவதற்குமான பொதுவான மூலப்படிவங்கள், அருட்தாய், அச்சுறுத்தும் தாய், ஆணுரு (animus), பெண்ணுரு (anima), நாயகன், தெய்வீகக் குழந்தை, தந்தை, ஞானமுதியவர்…." (மேலது., 30.). உலகம் முழுவதும் குழுவாழ்வில் தோற்றம் கொண்டதுபோல் தமிழும் குழுவாழ்வில் நாகரிகத் தோற்றம் கொண்டது. இவற்றை தொல் ஆராய்ச்சிகள் நிரூபித்து வருகின்றன.

**தமிழர் வாழ்வியல்**

கீழடி அகழ்வராய்ச்சியில் சாதி, மத அடையாளங்களுக்குரிய எந்தச் சான்றுகளும் கிடைக்கவில்லை என்பதை அறிஞர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள். இதுதான் தமிழ்ப் பண்பாடு. "தமிழக வரலாற்றின் பிந்தையகால இனக்குழுச் சமுதாய வாழ்வின் எச்சங்களையே பண்பாடு என்னும் பெயரில் சங்க இலக்கியப் பாடல்களின்வழி அறிய முடிகின்றது" (நலங்கிள்ளி, 2019:255). அத்தகைய சங்க இலக்கியப் பாடல்களில் புறம் 325ஆவது பாடல் 'மக்கள் இணைந்து வேட்டையாடுவதையும் இணைந்து கறியை வாட்டுவதையும் மன்றத்தில் வைத்துப் பரிமாறுவதையும் பதிவு செய்துள்ளது'. எச்சங்களே இவ்வாறு உள்ளது என்றால் சமூகக் கூட்டு வாழ்வு எவ்வளவு பொதுவுடைமைப் பண்புகளைக் கொண்டிருக்கும். வேட்டையாடுதல், பகிர்தல், கூடி வேலை செய்தல், இன்பமாக வாழ்தல் ஆகியவை இயற்கையோடு இயற்கையின்படி வாழும் கூட்டு வாழ்வியலாகும். இந்தக் கூட்டு வாழ்வியல் பண்புதான் தமிழர்களின் தொடக்கக் காலப் பண்பாடாகும். சங்க காலச் சமூகம் உடைமைச் சமூக எழுச்சியாக அமைந்திருக்கிறது. அதனால் கூட்டு வாழ்வியல் சிதைந்தாலும் குழுவாழ்வியல் கூறுகளான வேட்டையாடுதல், மன்றங்களில் கூடுதல், இன்பவாழ்வு (காதல்), விருந்தோம்பல், கொடை, எதிர்ப்புணர்வு எனக் கூட்டு வாழ்வியல் அனுபவங்களாவதை அவதானிக்க முடிகிறது. எனவே கூட்டு வாழ்வியல் கூறுகளான இயற்கையோடு வாழ்தல் மூலப்படிவமாக ஆகிறது.

இயற்கையோடு வாழ்தல் மூலப்படிவம் என்பது கூடி உழைப்பது, கூடி உண்பது, கூடி மகிழ்வது. இது இன்றும் குலதெய்வ விழாக்களில், பொங்கல் பண்டிகைகளில், திருவிழா காலங்களில் மக்களிடையே வேறு வடிவங்களில் செயல்படுவதைக் கொண்டு உறுதிப்படுத்தலாம். விழாக்கள் இல்லாத இலக்கியங்களே இல்லை என்று சொல்லலாம்.

தமிழின் தொடக்கக்காலப் பண்பாட்டின் எச்சங்கள் சார்ந்த புலவர் ஔவையார். அவர் “எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே” (புறம்.206) என்று அரசன் தன்னை அரண்மனைக்குள் அனுமதிக்காதபோது தனது அறிவை ஆயுதமாக்கி எழுதுகிறார். இது ஒரு சுயமரியாதை வரி. இந்தச் சுயமரியாதை உழைப்பை ஆயுதமாகக் கொண்டவருக்கு உரியது. கூட்டு வாழ்வியலை உடைமை வாழ்வியல் வீழ்த்தியபோது அவ்வீழ்ச்சி மான உணர்ச்சியாக எஞ்சி நின்றது. அதன் வெளிப்பாடுதான் அவ்வரி. போர்வீரம் என்பதைத் தமிழர் பண்பாடு என்று நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். அவ்வீரம் வாழ்தலுக்கான வீரமாகக் குழு வாழ்வில் இருந்தது. அதுதான் தமிழர் பண்பாடு. அதை இழந்தபோதுதான் மானத்தையும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் (யாதும் ஊரே யாவரும் கேளிர்) பேச வேண்டிய நிலை உருவாகிறது. இதை ஔவையாரும் கணியனும் தனது பாடல்களில் செய்துள்ளார்கள். அந்த மானமும் அதாவது சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் தமிழரின் மூலப்படிவங்களாகக் கூட்டுநனவிலியில் சேகரமாகிறது.

“ஒட்டுமொத்த மனத்திற்குச் சுயம் மையம்... இதுவே முதன்மையான மூலப்படிவம்” (தி.கு.ரவிச்சந்திரன், 2014: 246) என்கிறார் யூங். அப்படியானால் மேற்கூறிய தமிழரின் மூலப்படிவங்கள் அனைத்தும் சுயம் என்னும் அனைத்துலக மூலப்படிவத்தின் மீது அமைந்தவை. இந்தச் சுயம் என்பதில் பிரிவினைகளோ முரண்களோ இல்லை. இதை ஆரோக்கியமான மனநிலையால் அடையமுடியும். ஒருவேளை முழுமையை அடையமுடியாமல் போனால் பதிலிகளின்வழி அவை நிறைவேற்றம் அடையும். சுயத்தை அடைதல் என்பது ஆதிநிலை என்பதாகப் புரிந்துகொள்ளலாம். தோன்றிய இடத்திற்கே செல்வது. பிரிவினை சக்திகளால் ஓர் இனத்தை அதன் சுயநிலையை அடையமுடியாமல் தடுக்க முடியும் என்பதை இதன்மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

தமிழ்மொழி கண்டுபிடிக்கப்பட்டபோது கூட்டு வாழ்வியல் தமிழ்மொழிக்குள் வந்து சேர்கிறது. அதனால்தான் ஆரிய வருகையின்போது தொல்காப்பியம் அவர்களுக்கு எதிர்நிலையில் அல்லது அவர்களுக்குப் பதில் சொல்லும் விதமாக எழுதப்படுகிறது. இதைப் பல அறிஞர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். “வடசொல் கிளவி வடவெழுத்து ஒரீஇ” (தொல்.395) என்று தமிழ் வடமொழியிலிருந்து தன்னை வேறுபடுத்துகிறது. தனியாகப் பிரிக்கிறது. குறிஞ்சிப்பாட்டு என்னும் பத்துப்பாட்டு அக இலக்கியவழி ஆரியத்திற்குத்

தமிழின் இன்பவாழ்வு சொல்லித்தரும் விதமாக எழுதப்பட்டது என்று வரலாறு கூறுகிறது. ஆரியத்திற்கு எதிரான தமிழின் இந்தச் செயல்பாடு கூட்டு வாழ்வியல் தமிழ்மொழிக்குள் வந்ததைச் சுட்டுகின்றன. எனவே தமிழ்மொழி தமிழ்ப்பண்பாட்டின் மூலப்படிவமாகும்.

சமணமும் பௌத்தமும் தமிழுக்கு வந்த சமயங்கள் என்றாலும் அவை அதிகாரத்திற்காக வரவில்லை. அதுமட்டுமல்லாது அறிவை முன்னிறுத்தி இயங்கிய சமயங்கள். அதனால் தமிழுக்கு நிறைய அறநூல்களையும் காப்பியங்களையும் (இவை குறித்த விவரங்கள் அனைவருக்கும் தெரிந்தவை என்பதால் அவற்றின் விவரங்கள் இங்குத் தவிர்க்கப்படுகின்றன) அளித்துத் தமிழுக்கு ஆக்கம் செய்தன. உடைமைச் சமூக அரசுகளோடு மெல்ல மெல்ல ஆரியர்கள் உள்நுழைய ஆரம்பிக்கின்றனர். அவர்கள் பேசும் அறம் வீடுபேறு சார்ந்ததாக இருந்தது; இயற்கைக்கு எதிராக இருந்தது. அந்தச் சமயத்தில் நிறைய அறநூல்களை பௌத்தமும் சமணமும் அறிவுநிலையில் செய்தன. என்றாலும் அவை மொழியளவில் இல்லாமல் கருத்தளவில் செயல்பட்டன. அதனால் நிறைய வடமொழிச் சொற்கள் உருவாகின. அது ஆரியமயமாக்கலுக்குத் துணையாயின. சமண, பௌத்த சமயங்கள் பேசிய அறங்கள் சங்க வாழ்வியல் பேசிய அறங்களுக்கு மாறுபட்டவை. என்றாலும் முழுமையும் தமிழுக்கு எதிரானது அல்ல. அதனால் தமிழ் அவற்றோடு இணைந்து இயங்கியது. பௌத்தத்தைத் தமிழ் ஏற்றதால் பௌத்தம் இன்று தலித்துகளின் விடுதலை ஆயுதமாக மாறி நிற்கின்றது. சமணம் பெண்களைப் போற்றாததாலும் இன்பவாழ்வை ஏற்காததாலும் (இல்லறம்) ஆரியத்திற்கு எதிர்நிலை எடுக்காததாலும் மறு கட்டுமானமாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பக்தி இலக்கியம் ஆரிய தத்துவமான வேதத்தின் கருத்தியலை உள்வாங்கிக்கொண்டு தமிழால் வளர்ந்த இலக்கியம். இதனைத் திருஞானசம்பந்தர் தண்தமிழ், இன்தமிழ், ஞானத்தமிழ், செந்தமிழ், முத்தமிழ் எனப் பல தமிழால் பக்தியை வளர்த்தமையைக்கொண்டு அறியலாம். தமிழ் என்பது கூட்டு வாழ்வியல் என்று ஏற்கெனவே பார்த்தோம். அந்தக் கூட்டு வாழ்வியலைப் பக்தி என்ற பெயரில் தமிழ்மொழியைப் பயன்படுத்தி இணைத்ததால் பக்தி இலக்கியம் வளர்ந்தது. பக்தி அதிகாரத்தோடு இணைந்து இயங்கியதால் பக்தி இயக்கம் தமிழ்நாடு முழுவதும் பரவலானது. இங்கு மேல்மனநிலையில் ஓர் அடிமையுணர்வு

கூட்டுவாழ்வியலைக்கொண்டே உற்பத்தி செய்யப்பட்டது. அதனால் யூங்கின் சுயத்தை அடைவது மட்டுப்படுத்தப்பட்டது. சித்தர்கள் இதற்கு மாற்றாக தனிமனித உணர்வைப் பேசி இயற்கையோடு இயைந்து முரண்பாடு இல்லாமல் வாழ முயன்றதனால் யூங்கின் சுயத்தை அடைவதில் பக்தி இயக்கம் பக்தியின் பெயரால் ஏற்படுத்தியத் தடையை ஓரளவு மட்டுப்படுத்தியது.

நாயக்கர் காலம் மொழிச்சிதைவு ஏற்பட்ட காலம். ஆரிய மடங்கள் பெருகி தமிழ்மொழி ஓரங்கட்டப்பட்டது. ஆனாலும் தமிழரின் கூட்டு வாழ்வியல் பக்தி என்ற பெயரில் வாழ்வியலாகத் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தது. சிற்றிலக்கியத்தில் தமிழ் மொழி வெற்று மொழியாகச் செயல்பட்டது என்று கூறலாம். ஐரோப்பியர்கள் வருகை, அச்சு இயந்திரக் கண்டுபிடிப்பு, பதிப்புப் பணி, கல்விப் பரவலாக்கம், திராவிடக் கண்டுபிடிப்பு அதன் அரசியல் செயல்பாடு போன்ற அம்சங்கள் கூட்டு நனவிலியோடு மட்டும் இருந்துகொண்டிருந்த தமிழோடு இணைந்தது. அதனால் திராவிடச் செயல்பாடு தனித்துவத்தை நோக்கி நகர்ந்தது. பெரியார் சுயமரியாதையைக் கண்டுபிடித்தார் என்று தமிழவன் (பார்க்க : நவமார்க்சிய வழியில் திராவிடத் தமிழ்ச் சிந்தனைகள்) கூறுகிறார். அவர் எப்படிக் கண்டுபிடித்தார் என்றால் சுயம் என்னும் மூலப்படிவத்தின்வழிதான். “சுயம் என்பது முழுமை (Wholeness) என்பார் யூங். அனைத்தும் உள்ளடங்கிய ஏற்புடைமை வடிவிலானது சுயம். இதுதான் முழுமையான ஆளுமை. அனைவருக்கும் என்றாவது வாய்க்கும் முழுமை.. இந்த வகையில் பெரியார், அம்பேத்கர் முதலியோர் உள்ளனர் (தி.கு.ரவிச்சந்திரன், 2014: 253-254).

பெரியார் எந்தப் பற்றுமில்லாத நிலையை நோக்கி நகர்ந்தார். அது ஒரு ஆதிமனித நிலை; தன்னை முழுமையாக உணர்தல். அதுதான் யூங்கின் சுயம். அந்த உணர்தலால் பண்பாட்டு விடுதலைக்கான சுயத்தைக் கண்டுபிடித்தார். கண்டுபிடித்ததோடு நிற்காமல் அதைப் பரவலாக்கம் செய்தார். அதன்வழி அனைவரையும் தன்நிலையை உணர வைத்தார். அனைவரும் முழுமையாக உணரவில்லை ஆயினும் ஓரளவேனும் உணர்ந்தனர். அந்த உணர்தல் தமிழ்மொழி என்ற அளவில் ஒவ்வொருவரையும் தமிழரின் கூட்டு நனவிலியோடு இணைத்தது. அதனால் இன்றுவரை அடிமைநிலைத் தொடர்ந்தாலும் ஆரியப் பண்பாட்டுத் தாக்கம் இருந்தாலும் தமிழ்ப் பண்பாடு

தனித்துவமாக இருக்கிறது. இதில் தனித்தமிழ் இயக்கமும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைத் தமிழ் ஓர்மையில் நின்று செயல்படுத்தியது. பாரதிதாசனின் தமிழ் ஓர்மைசார் பகுத்தறிவு இலக்கியம் குறிப்பிடத்தகுந்தவை. இவையெல்லாம் நனவுமனத்தில் உருவானவை என்றாலும் நனவிலி மனத்திற்குத் தோதானவையாக அதாவது தமிழ் மூலப்படிவத்தோடு நேரடித்தொடர்புடையவை. அதனால் தமிழ் தனித்துவமாக இருக்கிறது.

திராவிடச் சிந்தனை பெரிய அளவில் (பாரதிதாசன், அண்ணா தவிர) இலக்கியத்தைப் பக்தி இலக்கியம்போல் நுட்பத்துடன் கையாளவில்லை. அதனால்தான் திராவிடச் சிந்தனை அரசியலைப் பாதித்த அளவு பண்பாட்டைப் பாதிக்கவில்லை. பண்பாட்டில் ஆரியம் வலுப்பெற்றுக்கொண்டேதான் இருக்கிறது. அதற்கு அண்ணாவிற்குப் பிறகு திராவிட அரசியல் முதலாளித்துவத் தன்மை அடைந்து வருவதும் காரணமாகும். 2009 இனப்படுகொலைக்குப் பிறகு புதிய தமிழ் ஓர்மை ஒன்று உருவாகிச் சுயமரியாதை உணர்வு மீண்டும் தமிழ்மூலப்படிவத்தோடு இணைந்துள்ளது. தமிழவனின் எழுத்துகள் சுயமரியாதையை உற்பத்தி செய்வதோடு பிரபாகரனை அரசியல் நனவிலியாக மாற்றுகிறது. மேலும் தமிழவனின் படைப்புகள் நாட்டார் கதைசொல்லல் மரபையும் தமிழ்ச் சங்க இலக்கிய மரபையும் தொல்காப்பியத் தத்துவத்தையும் இணைத்துப் புதிய வகையில் தமிழை அறிவு சார்ந்துக் கட்டமைக்கிறது. நாட்டார் கூறு ஆரியத்திற்கு எதிரான தமிழின் கூட்டுவாழ்வியலை இன்றும் நல்லமுறையில் பாதுகாத்து வருபவை. அரசியலிலும் முதலாளித்துவ திராவிடத்தை மீட்பதற்குச் சில செயல்பாடுகள் நடைபெறுகின்றன. ஆகத் தமிழ்த் தனித்துவமாகத் தொடர வேண்டுமானால் தமிழ் என்னும் கூட்டு நனவிலிக்கு ஏற்ற நனவுமனச் செயல்பாடுகள் பெருக வேண்டும். அதற்குப் பெரியார் உருவாக்கிய சுயமரியாதை ஒரு மூலப்படிவமாக அனைத்து மட்டங்களிலும் உருவாகி, யூங்கின் சுயத்தை நோக்கி நகரும் மனநிலைப் பெருக வேண்டும்.

**துணைநூற்பட்டியல்**


- ❖ நலங்கிள்ளி, அரங்க.,2019 : **சங்க இலக்கியம் : ஒரு ஃபிராய்டிய உளப்பகுப்பாய்வு வாசிப்பு**, சென்னை : பரிசல் புத்தக நிலையம்.

❖ ரவிச்சந்திரன், தி.கு., 2014: **தீ.ண்.டா.மை நனவிலி சாதிய உளப்பகுப்பாய்வு**, சென்னை : அலைகள் வெளியீட்டகம்.

❖ ரவிச்சந்திரன், 2017 : **புதுமைப்பித்தன் கனவும் உளப்பகுப்பாய்வு ஆய்வும்**, சென்னை : அலைகள் வெளியீட்டகம்

❖ தமிழவன், 2023: **நவமார்க்சிய வழியில் திராவிடத் தமிழ்ச் சிந்தனைகள்**, பொள்ளாச்சி : எதிர் வெளியீடு.